# பேராலய ஒலி

## பங்கு மாத இதழ்





ஒலி – 06 மார்ச் – 2021 அலை – 3



# பங்குப் பணியாளர்களிடமிருந்து...

**அன்புக்குரியவர்களே,**

வணக்கமும், வாழ்த்தும். தவக்காலத்தில் கடவுளின் பேரன்பையும் பேரிரக்கத்தையம் உணர்ந்து அனுபவித்து வருகிறோம். நாம் செய்யும் செபங்கள், சிலுவைப்பாதை போன்ற சிறப்பு பக்தி முயற்சிகள், உடலை ஒறுக்க நாம் மேற்கொள்ளும் நோன்பு உள்ளிட்ட தவ முயற்சிகள், நாம் செய்யும் ஏழைகளுக்கான, நோயாளிகளுக்கான பிறரன்புச் செயல்கள் நம்மை அடுத்திருப்பவரிடத்தும் கடவுளிடமும் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. பங்கில் வெள்ளிக்கிழமை சிலுவைப் பாதையிலும், பூந்தோட்டம் - ஆர்.சி. காம்பவுண்டு, மார்சிங்பேட்டை கிளைப்பங்குகளின் வீதிகளிலும் நடைபெற்ற சிலுவைப் பயணங்களிலும் ஏராளமாய் பங்கெடுத்தது குறித்து மகிழ்ச்சிடைந்தோம். ஊர்ப் பொறுப்பாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஏற்பாடு செய்திருந்தது பாராட்டுக்குரியது.

ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், சிறு தொழில் முனைவோருக்கும் உதவிட பலர் முன்வருவது குறித்து உவகையடைகிறோம். மனம் நிறைந்த நன்றிகள்.

நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த ஆண்டை புனித சூசையப்பரின் ஆண்டாக அறிவித்திருக்கிறார்கள். ‘நேர்மையாளர்’ என்று விவிலியம் வியந்துப் பாராட்டும் புனித சூசையப்பரின் பராமரிப்பிலேயே திருக்குடும்பம் வாழ்ந்தது. அவரையே நம் குடும்பங்களின் பாதுகாவலராகக் கொண்டாடுகிறோம். கத்தோலிக்கத் திரு அவை இம்மகத்தானப் புனிதரை தனது பாதுகாவலராகவும் கொண்டாடி மகிழ்கிறது. உழைப்போரின் பாதுகாவலராகவும், நன்மரணத்தின் பாதுகாவலராகவும் இவர் விளங்குகிறார்.

இவ்வருடம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி வரை உள்ள எல்லா புதன் கிழமைகளிலும் பேராலயத்தில் காலை, மாலை திருப்பலிகளுக்குப் பின் புனித சூசையப்பருக்கு நவநாள் செபம் சொல்லப்படுகிறது. நம் வீடுகளிலும் அவரைக் கொண்டாடுவோம். மார்ச் மாதம் 19-ம் தேதியும் மே மாதம் முதல் தேதியும் புனிதரது திருநாட்களை சிறப்பாகக் கொண்டாடுவோம் வாருங்கள்.

ஆசியுடன்,

**அருள்திரு. த. சகாயராஜ்,** பங்குப்பணியாளர்

**அருள்திரு. சு. மரியசூசை,** உதவிப்பங்குப்பணியாளர்

## சிறுதொழில் முனைவோருக்கு செய்யப்படும் உதவிகள்...

### நீங்களும் உதவ முன்வரலாமே!








"நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை."

(எபிரேயர் 13-16)

## பிப்ரவரி மாதத்தில் நிகழ்ந்தவை

* 2ஆம் தேதி துறவோர் தினத்தை முன்னிட்டு மாலை 6.15 மணிக்கு நம் பங்கில் பணிபுரியும் துறவோருக்காக சிறப்புத் திருப்பலியும் அதன்பின் அவர்களுக்கு அன்பின் விருந்தும் நடைபெற்றது.

* 7ஆம் தேதி அன்பிய ஆண்டு விழாவானது சிறப்பிக்கப்பட்டது. மாலை 4 மணிக்கு கருத்தமர்வுக் கூட்டமும் அதன்பின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாலை 6.15 மணிக்கு சிறப்புத் திருப்பலியும், அதன் பின்பு அன்பின் விருந்தும் நடைபெற்றது.

* 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் நமது பங்கிலிருந்து தூத்துக்குடி, குழித்துறை மற்றும் கோட்டாறு ஆகிய மறைமாவட்டங்களிலுள்ள சில முக்கிய திருத்தலங்களுக்கு 110 பேர் திருப்பயணமாக சென்று வந்தோம்.

* 11ஆம் தேதி காலை 7 மணிக்கு கூனிபஜார் பகுதியிலுள்ள புதுப்பிக்கப்பட்ட புனித அடைக்கல அன்னை ஆலயமானது கிராப்பட்டி மறைவட்ட அதிபர் அருள்பணி. ஜோ. ஜோ. லாரன்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, மறைமாவட்ட முதன்மைச் செயலர் அருள்பணி. A. ஜெயராஜ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டு, திருப்பலியானது நிறைவேற்றப்பட்டது.

* 11ஆம் தேதி காலை 9 மணிக்கு நம் பேராலயத்தின் கீழ்த்தளத்திலுள்ள அரங்கிற்கான புதுப்பிக்கப்பட்ட உணவறையும், கல்லறைத் தோட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட சுற்றுச்சுவரும் மறைமாவட்ட முதன்மைச் செயலர் அருள்பணி. A. ஜெயராஜ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

* 28ஆம் தேதி மறைக்கல்வி மாணாக்கருக்கான சிறப்பு தவக்கால தியானம் காலை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை நடைபெற்றது. அருள்பணி. லியோ மெல்கியூர் பாபு அவர்கள் சிறப்பாக தியானத்தை வழிநடத்தினார்.

* 28ஆம் தேதி காலை 8.30 மணித் திருப்பலிக்குப் பின்பு புனித வளனார் கல்லூரி AICUF மாணவர்களால் அரசியல் விழிப்புணர்வு வீதி நாடகம் பேராலய வளாகத்தில் நடைபெற்றது.

# மார்ச் மாதத்தில் நிகழவிருப்பவை

* தவக்கால வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.15 மணிக்கு பேராலயத்தில் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து சிலுவைப்பாதையும் நடைபெறும்.
* தவக்கால செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6.15 மணிக்கு கிளைக்கோயில்களில் திருச்சிலுவைப்பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.
* 5ஆம் தேதி காலை 10 மணிக்கு முதியோர் மற்றும் நோயுற்றோருக்கான சிறப்புத் திருப்பலி நடைபெறும்.
* இந்த ஆண்டுக்கான பங்கின் தவக்கால தியானமானது 13ஆம் தேதி சனி மாலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், 14ஆம் தேதி ஞாயிறு காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரையிலும் நடைபெறும்.
* 20ஆம் தேதி சனி இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரை தவக்கால சிறப்பு அருங்கொடை முழு இரவு செப வழிபாடு நடைபெறும்.
* 24ஆம் தேதி புதன் மாலை 4.30 மணிக்கு தவக்கால சிற்றூர் சந்திப்பாக லூர்து நகர் பங்கின் அரசாங்குடி மற்றும் விளாங்குடி கிராமங்களுக்குச் செல்வதாக திட்டமிட்டப்பட்டுள்ளது.
* தவக்காலத்தின் எல்லா வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை பேராலயத்தில் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.
* 28ஆம் தேதி குருத்து ஞாயிறு அன்று காலை 6.30 மணி, மாலை 5.00 மணி (ஆங்கிலம்) மற்றும் மாலை 6.00 மணி திருப்பலிகள் மட்டுமே நடைபெறும்.
* 29ஆம் தேதி திங்கள் மாலை 5.30 மணிக்கு நமது மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர். தேவதாஸ் அம்புரோஸ் அவர்களின் தலைமையில் மறைமாவட்ட அருள்பணியாளர்கள் இணைந்து கொண்டாடும் திருத்தைலம் மந்திரிப்பு திருப்பலியானது நடைபெறும்.
* 31ஆம் தேதி புதன் மாலை 6.00 மணிக்கு ஒப்புரவு வழிபாடு நடைபெறும்.

# திருச்சிலுவைப்பாதையை வழிநடத்தும் அன்பியங்கள்

| தேதி | அன்பியங்கள் | நிலை |
|---|---|---|
| 05.03.21 | புனித மத்தேயு கபிரியேல் அன்பியம் | 1, 2 |
| | சகாயமாதா அன்பியம் | 3, 4 |
| | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | 5, 6 |
| | புனித பவுல் அன்பியம் | 7, 8 |
| | குழந்தை இயேசு அன்பியம் | 9, 10 |
| | மரியாயின் சேனையாளர்கள் | 11, 12 |
| | திருச்சிலுவை அருள்சகோதரிகள் | 13, 14 |
| 12.03.21 | புனித சந்தியாகப்பர் அன்பியம் | 1, 2 |
| | புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம் | 3, 4 |
| | புனித மரியம் தெரசா அன்பியம் | 5, 6 |
| | புனித செபஸ்தியார் அன்பியம் (கெம்ஸ்டவுன்) | 7, 8 |
| | புனித அடைக்கலமாதா அன்பியம் (மரக்கடை) | 9,10 |
| | புனித அன்னாள் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | பலிபீட சிறார்கள் | 13, 14 |
| 19.03.21 | புனித மோட்சராக்கினி மாதா அன்பியம் | 1, 2 |
| | புனித பர்னபா அன்பியம் | 3, 4 |
| | புனித அமலோற்பவ மாதா அன்பியம் | 5, 6 |
| | புனித செல்வநாயகி மாதா அன்பியம் | 7, 8 |
| | புனித மரியன்னை அன்பியம் | 9, 10 |
| | புனித பிலோமினாள் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | மறைக்கல்வி மாணாக்கர், ஆசிரியர்கள் | 13, 14 |
| 26.03.21 | புனித ஜெஸ்டின் அன்பியம் | 1, 2 |
| | புனித அந்தோணியார் அன்பியம் (கூனிபஜார்) | 3, 4 |
| | புனித மலைமாதா அன்பியம் | 5,6 |
| | புனித செபஸ்தியார் அன்பியம் (கூனிபஜார்) | 7, 8 |
| | புனித சவேரியார் அன்பியம் | 9, 10 |
| | புனித தாமஸ் அருள்சகோதரிகள் | 11, 12 |
| | இளையோர் இயக்கம் | 13, 14 |
| 02.04.21 | பங்குப்பேரவை | 1-14 |



# புனித வியாழன் நற்கருணை ஆராதனையை வழிநடத்துவோர்

| | | |
|---|---|---|
| இரவு | 09.00 – 10.00 | பங்கு பேரவையினர், பங்குத்தந்தையர் |
| | 10.00 – 11.00 | வின்சென்ட் தே பவுல் சபை |
| | 11.00 – 12.00 | திருச்சிலுவை அருள்சகோதரிகள் |
| காலை | 05.00–06.00 | புனித அன்னாள் அருள்சகோதரிகள் |
| | 06.00–07.00 | புனித பிலோமினாள் அருள்சகோதரிகள், புனித தாமஸ் அருள்சகோதரிகள் |
| | 07.00 – 08.00 | மரியகம், அருள்சகோதரிகள், புனித இமாக்குலேட் அருள்சகோதரிகள் |
| | 08.00 – 09.00 | சந்தியாகப்பர், செபஸ்தியார், பிரான்சிஸ் சேவியர், சகாயமாதா, மரியம் தெரசா அன்பியங்கள் |
| | 09.00–10.00 | செல்வநாயகி, அமலோற்பவமாதா, பர்னபா, மோட்சராக்கினி மாதா அன்பியங்கள் |
| | 10.00–11.00 | வளன், சிறுமலர், லூர்தன்னை, ஆசிர்வாதப்பர், அந்தோணியார் (ம.பேட்டை) பவுல் அன்பியங்கள் |
| | 11.00–12.00 | சவேரியார், செபஸ்தியார், அந்தோணியார், மலைமாதா, இருதய ஆண்டவர், அடைக்கலமாதா (கூனிபஜார்), ஜெஸ்டின் அன்பியங்கள் |
| மதியம் | 12.00–1.00 | செசிலியா, மத்தேயு கபிரியேல், ஆரோக்கிய அன்னை, மரியன்னை, அடைக்கலமாதா (மரக்கடை), அன்னை தெரசா, அருளானந்தர், குழந்தை இயேசு அன்பியங்கள். |
| | 1.00 – 2.00 | பலிபீட சிறார்கள், இளையோர் இயக்கம் |
| | 2.00 – 3.00 | பெண்கள் பணிக்குழு, பாடகர் குழு |
| | 3.00 – 4.00 | பொது ஆராதனை (அமைதி) |

# வாழ்வே தவமாக...

நம் வாழ்வைப் புடமிடும் காலமாக திரு அவை நமக்கு இத்தவக்காலத்தை தந்துள்ளது. இப்புனித மிகு வேளையில்தான்... நாம் ஆண்டுதோறும் மார்ச் 19ஆம் நாளில், நம் அன்புக்குரிய புனிதர் வளனாரின் விழாவை தனிச்சிறப்போடுக் கொண்டாடுகிறோம். தூய வளனார், எல்லா புனிதர்களிலும் தனித்துவம் வாய்ந்தவர். இறைமகன் இயேசுவுடன் வாழ்ந்தவர். அமைதியின் வடிவம்; இறை அருளின் கொள்கலம்!

இத்தவக்காலத்தில்... தன் வாழ்வையே தவமாக்கி இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்த புனித யோசேப்பிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் பல. இல்லற வாழ்வைத் துவக்கும் முன்பே மனைவி மரியா கருவுற்றதை அறிந்த சூசை அவரை இழிவுக்கு உள்ளாக்க விரும்பவில்லை. அவர் ஒரு நேர்மையாளர். யூத சட்டத்தில், இத்தகையத் தவறுக்கு கல்லால் எறிந்து அப்பெண் கொல்லப்படுவார். இதை அறிந்தவர் சூசை. எந்த விவரமும் அறியாத நிலையிலும் யோசேப்பு தன் மனைவி மரியாவை அவமானத்திற்கும் கொடிய சாவிற்கும் உட்படுத்த மனமில்லாமல், அவரை மறைவாக விலக்கி விடத் திட்டமிடுகிறார், பொறுமைக் காக்கிறார்.

யோசேப்புக்கு கடவுளோ அவரின் தூதரோ நேரில் காட்சித்தந்து பேசியதாக நம் நற்செய்தியில் எங்கும் காணவில்லை. எல்லா நேரத்திலும் கடவுளின் கட்டளையை - விருப்பத்தை கடவுளின் தூதர் அவர் கனவில் தோன்றியே அறிவுறுத்துகிறார். அதை சூசை அப்படியே ஏற்றுக் கொள்கிறார். "உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர்..." (மத் 1:19-21) என்றபோதும், வளனார் அதனை மனமுவந்து செயல்படுத்தினார்.



இறைவன் விருப்பப்படி தன் இன்ப சுகங்களையெல்லாம் ஒதுக்கி விட்டு மரியாவுக்கு நல்ல துணைவனாக – பொறுப்புள்ள குடும்பத் தலைவனாகவே யோசேப்பு செயல்பட்டார்.

மேலும் கருவுற்ற மரியாவை அழைத்துக் கொண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்காக கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேமிற்கு சென்றபோதும்...

அங்கு மரியாவுக்கு பேறுகாலம் நெருங்கியபோது தங்க இடமின்றி, தேடி அலைந்து தவித்தபோதும்...

குழந்தை பிறந்ததும் மாடடைக் குடிலில் தாயையும் குழந்தையையும் பராமரிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளின் போதும்...

முதலில் ஆடு மேய்ப்பவர்களும், பின் வெவ்வேறு திசைகளிலிருந்து மூன்று ஞானியர்களும் அங்கு வந்து குழந்தைக்கு பரிசுகளைத் தந்து வணங்கிய போதும்...

ஏரோது பாலன் இயேசுவைக் கொல்லத்துடித்த போது வானதூதர் அறிவித்தபடி எகிப்துக்கு மரியாவையும் குழந்தையையும் அழைத்துச் சென்றபோதும்... கனவில் தூதர் அறிவித்தபடி இஸ்ரயேல் நாட்டுக்குத் திரும்பியபோதும்... பின் நாசரேத்தில் குடியேறப் பணித்த போதும்... ஆலயத்தில் சிமியோன் சொன்ன துயரச் செய்தியைக் கேட்டபோதும்... குழந்தை இயேசு காணாமல் போனபோதும்... பின் அவரை எருசலேம் ஆலயத்தில் மூன்று நாட்களுக்குப் பின் கண்டபோதும்... புனித வளனார், இன்பத்தையும் துன்பத்தையும் இறைவன் திருவுளமென மௌனமாக, பொறுமையாக, இறைநம்பிக்கையோடு ஏற்று வாழ்ந்தது அவரின் தனிச்சிறப்பு! இயேசுவின் மீட்புப் பணியில் அதிகமாக – அமைதியாக செயல்பட்டவர்.

அவர் வாழ்ந்த காலமெல்லாம் ஏழ்மையிலும் மனசாட்சியோடு, கடினப்பட்டு உழைத்து குடும்பத்தை நடத்தி, மரியாவையும் இயேசுவையும் அன்போடு பாதுகாத்து பராமரித்து திருக்குடும்பமாக்கியது அவரது தனித்தன்மை!

தூய வளனாரின் வாழ்வு முழுவதும் ஒரு தவவாழ்க்கை. இத்தவக் காலத்தில் நம் வாழ்க்கை எப்படி உள்ளது என்ற சிந்தனையை அவரது திருநாள் நம்முள் எழுப்பட்டும்!

செல்வி. **வி. லீமா ரோஸ்**

இம்மாத சிந்தனைக்கு

## "தம் வாயையும் நாவையும் காப்பவர், இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக் கொள்வார்"

மனுக்குலம் மீட்படைய, குற்றமே செய்யாத தனக்கு விதிக்கப்படும் சிலுவை மரணத் தீர்ப்பை, அமைதியாக ஏற்றுக் கொண்ட நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்து, "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்" என்று கூறியதை ஏற்று, பிறரிடம் குறை கூறுதல், சண்டை இடுதல், வெறுப்பான தகாத வார்த்தைகள் பேசுதல், பழி சுமத்துதல், பிறரை அவமானப்படுத்துதல், பிறர் செய்த தவறுகளைக் குத்திக் காட்டுதல் போன்ற, தீய செயல்களை தவிர்க்க முற்பட வேண்டும். இதற்கு நாம் என்ன செய்திட வேண்டும்? "தம் வாயையும் நாவையும் காப்பவர், இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக் கொள்வார்" எனும் திருவிவிலியத்தில், கூறப்பட்டிருக்கும் நீதிமொழிகள் 21:23 வசனத்தை இம்மாத சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். வாயையும் நாவையும் நாம் எவ்வாறு காத்துக் கொள்வது எனில், நம் இயேசுவை போன்று, நாமும், அநேக நேரங்களில், அமைதி காக்க வேண்டும். எந்தெந்த சூழ்நிலைகளில் நாம் அமைதியாக இருக்க வேண்டும் தெரியுமா?

### அமைதி காத்தல் - செயல்முறைத் திட்டம்

- கோபத்தின் உச்சத்தில்
- அனைத்து உண்மைத் தகவல்களும் இல்லாதபோது
- நம் வார்த்தைகள் பிறரை புண்படுத்தும்போது
- பிறர் கூறுவதை கவனிக்க வேண்டிய நேரத்தில்
- பிறர் பாவத்தைப் பற்றி கேளிக்கை செய்ய நினைக்கும்போது
- பேசிய சொற்களைப் பற்றி பின்னர் நினைத்து வெட்கப்படும்போது
- நம் வார்த்தைகள் தவறான எண்ணத்தை வெளிப்படுத்தும்போது
- ஒரு வெளிப்படையான பொய்யைச் சொல்ல நேரிடும்போது
- நம் வார்த்தைகள் வேறொருவரின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும்போது
- வார்த்தைகள் நட்பை சேதப்படுத்தும் போது
- பிறரை விமர்சிக்கும்போது
- ஏற்கனவே சொல்லவேண்டிய விஷயத்தை சொல்லியிருந்தால்
- ஒரு பொல்லாத நபரைப் புகழ்ந்து பேசும்போது
- வார்த்தைகள் தனக்கும் பிறருக்கும் எந்த நன்மையும் செய்யாதபோது

செபம், தவம், தர்மம் என்று கடைப்பிடிக்கப்படும் தவக்காலத்தில், மேற்குறிப்பிட்ட விவிலிய வார்த்தைகளின் வழியில் சிந்தித்து, அமைதி காத்தல், ஒரு சிறு முயற்சியாக எடுத்து செயல்படும்பொழுது, இச்சிறு முயற்சியும், ஒரு தவ முயற்சியே! விண்ணுலக வாழ்விற்கு, வித்திடும் என்பதுவும் உறுதியே!!!

திருமிகு. **ஜெயந்தி**

# திருவழிபாட்டு நாள்காட்டி

| நாள் | கிழமை | புனிதர்களின் நினைவு | முதல் & இரண்டாம் வாசகங்கள் | நற்செய்தி வாசகம் |
|---|---|---|---|---|
| 1. | திங்கள் | | தானி 9:4b-11a | லூக் 6:36-38 |
| 2. | செவ்வாய் | | எசா 1: 10,16-20 | மத் 23:1-12 |
| 3. | புதன் | | எரே. 18:18-20 | மத் 20:17-28 |
| 4. | வியாழன் | புனித கசிமீர் | எரே. 17 :5-10 | லூக் 16:19-31 |
| 5. | வெள்ளி | | தொ.நூ. 37 :3-4, 12-13, 17-18<br>திபா 105 :16-17.18-19.20-21 | மத் 21:33-43, 45-46 |
| 6. | சனி | | மீக் 7:14-15, 18-20 | லூக் 15:1-3,11-32 |
| 7. | ஞாயிறு | தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு | விப.20:1-17<br>1 கொரி 1:22-25 | யோவா 2:13-25 |
| 8. | திங்கள் | புனித ஜான் (துறவி) | 2 அர. 5:1-15 | லூக்.4:24-30 |
| 9. | செவ்வாய் | புனித பிரான்செஸ் | தானி(இ) 1 :2,11-19 | மத் 18:21-35 |
| 10. | புதன் | | இச. 4:1,5-9 | மத் 5:17-19 |
| 11. | வியாழன் | | எரே. 7:23-28 | லூக். 11:14-23 |
| 12. | வெள்ளி | | ஓசே. 14:1-9 | மாற்கு 12:28b-34 |
| 13. | சனி | | ஒசே. 6:1-6 | லூக். 18:9-14 |
| 14. | ஞாயிறு | தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு | 2குறி 36:14-16, 19-23<br>எபே. 2:4-10 | யோவான் 3 : 14-21 |
| 15. | திங்கள் | | எசா. 65:17-21 | யோவான் 4:43-54 |
| 16. | செவ்வாய் | | எசே 47:1-9, 12 | யோவான்1-3a, 5-16 |
| 17. | புதன் | புனித பேட்ரிக் (ஆயர்) | எசா. 49:8-15 | யோவான் 5:17-30 |
| 18. | வியாழன் | புனித சிரில் | விப. 32:7-14 | யோவான் 5:31-47 |
| 19. | வெள்ளி | புனித யோசேப்பு : புனித கன்னி மரியாவின் கணவர் | 2சாமு 7:4-5a, 12-14a, 16<br>உரோ 4:13,16-18,22 | மத் 1 :16,18-21, 24a |
| 20. | சனி | | எரே. 11:18-20 | யோவா. 7:40-53 |
| 21. | ஞாயிறு | தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு | எரே 31:31-34<br>எபி. 5:7-9 | யோவா 12:20-33 |
| 22. | திங்கள் | | தானி (இ) 2:1-9,15-17<br>19-30, 33-62 | யோவான் 8:1-11 |
| | | | தானி (இ) 2 : 41c-62 | |
| 23. | செவ்வாய் | புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ் | எண் 21:4-9 | யோவான் 8:21-30 |
| 24. | புதன் | | தானி 3:14-20, 24-25,28 | யோவா 8:31-42 |
| 25. | வியாழன் | ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு | எசா. 7:10-14; 8:10b<br>எபி 10:4-10 | லூக். 1:26-38 |
| 26. | வெள்ளி | | எரே 20:10-13 | யோவான் 10:31-42 |
| 27. | சனி | | எசா 37:21-28 | யோவான் 11:45-57 |
| 28. | ஞாயிறு | குருத்து ஞாயிறு | எசா 50:4-7<br>பிலி. 2:6-11 | மாற்கு 14:1-15:47 |
| 29 | திங்கள் | | எசா 42:1-7 | யோவான் 12:1-11 |
| 30 | செவ்வாய் | | எசா 49:1-6 | யோ. 13:21-33,36-38 |
| 31 | புதன் | | எசா 50:4-9 | மத். 26:14-25 |

# அன்பிய வழிகாட்டி

1. **தூய ஆவியார் பாடல்** : இறைபிரசன்னத்தை உணர்தல், தூய ஆவியானவரின் பாடலைப் பாடவும். இறைவார்த்தையை சொல்லி ஆண்டவரை ஆராதனை செய்யலாம்.

2. **தொடக்க செபம்** :

3. **வரவேற்றல்** :அன்பிய கூட்டத்திற்கு பங்கேற்க வருபவர்களை அன்பிய இல்லத்தார் மலர்ந்த முகத்துடன் வரவேற்றல்.

4. **அன்பிய இறைவேண்டல்** (10 மணி செபம்) : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே... செபத்துடன் ஆரம்பித்து ஒவ்வொரு மணியிலும் நமது கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுத்து செபித்து, அருள் நிறைந்த மரியே வாழ்க செபம் சொல்லவும்.

5. **கடந்த கூட்ட அறிக்கை** : கடந்த மாதம் நடைபெற்ற கூட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை வாசித்தல்.

6. **இறைவார்த்தை வாசித்தல்** : நற்செய்தி வாசகம் - மாற்கு 9:2-10 (இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொருவராக வாசிக்கலாம்).

7. **இறைவார்த்தையை பகிர்தல்** : வாசிக்கப்பட்ட நற்செய்தியிலிருந்து நமக்குத் தேவையான சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளுதல்.

- ✿ இயேசுவின் மலை அனுபவம் நம்முடைய வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தும் அனுபவமாக அமைந்திட வேண்டும்.
- ✿ இயேசுவின் அந்த மகிமையின் தோற்றம் இயேசுவைப் போன்று தந்தையாம் கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழும் எல்லோருக்கும் சாத்தியப்படும்.
- ✿ இயேசுவுக்கு செவிசாய்த்து அவரைப் போல வாழத் தொடங்கிட வேண்டும். அப்போது நமக்கு இறைத்தந்தை சான்று பகர்வார்.

8. **பரிந்துரை மன்றாட்டுகள்** :

- ✿ சட்டமன்றத் தேர்தலுக்காக
- ✿ கொரோனாவின் அடுத்த அலையின் தாக்கம் குறைய
- ✿ சமய நல்லிணக்கம் மேம்பட
- ✿ பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக

(இறுதியாக விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபம் சொல்லவும்)

9. **செய்திகள் பகிர்வு** : திரு அவை செய்திகள், பங்கு நிகழ்வுகள், அன்பிய நிகழ்வுகள்

10. **வாழ்த்து கூறுதல்** : அன்பியக் குடும்பங்களில் இந்த மாதம் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளை கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துகளை பரிமாறுதல்.

11. **நன்றி கூறுதல்** : கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றிகளை தெரிவித்தல்.

12. **மரியன்னைக்கு புகழ் பாடல்**

# நோன்பாக இருக்க வேண்டிய அடையாளங்கள்!!!

1. பசித்தவருக்கு உணவு கொடுப்பது நோன்பு!
2. அன்பு உள்ளம் கொண்ட எல்லா மனிதர்களையும் பார்த்து சிரிப்பது நோன்பு!
3. நம் எதிரிகளிடம் சமாதானம் செய்து வாழ்வது நோன்பு!
4. நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் கூறுவது நோன்பு!
5. கோபமில்லாமல் பேசுவது நோன்பு!
6. பிறரை ஏமாற்றாமல் இருப்பது நோன்பு!
7. இயேசுவின் பாடுகளில் ஒன்றையாவது செயலில் காட்டுவது நோன்பு!
8. ஏழைக் குழந்தைகளை படிக்க வைப்பது நோன்பு!
9. அன்பை பகிர்ந்து வாழ்வது நோன்பு!
10. ஏற்றத்தாழ்வு பார்க்காமல் இருப்பது நோன்பு!
11. பிறரைப் பற்றி அவதூறு பேசாமல் இருப்பது நோன்பு!
12. குடும்பங்களை குட்டி திருச்சபையாக மாற்றி வாழ்வது நோன்பு!
13. கீழ்ப்படிந்து வாழ்வது நோன்பு!
14. இயேசுவைப் பற்றி அறிவிப்பது நோன்பு!
15. கடவுளுக்குப் பயந்து வாழ்வது நோன்பு!
16. கடவுளின் கட்டளைகளை கடைபிடித்து வாழ்வது நோன்பு!
17. தினமும் இறைவனின் அன்புக் கடிதத்தை படித்து தியானிப்பது நோன்பு!
18. பிறருக்காக வாழ்வது நோன்பு!
19. செபத்தை செயலாக மாற்றுவது நோன்பு!
20. இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு இவைகளின் முழுமை என்பது, ஒரு முழு மனிதனின் உண்மையான அடிப்படைச் செயல்களில் (அன்பு, பரிவு, இரக்கம், பகிர்வு, ஒற்றுமை, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், சமாதானம், பொறாமை விடுத்தல், ஒழுக்கம், செபம் செய்தல், திருப்பலிக்குச் செல்லுதல், உதவி செய்தல், ஆறுதல் கூறுதல், கோபத்தை விடுத்தல்) அடங்கியுள்ளது.

    இயேசுவின் **சிலுவை** வெற்றி தரும்!

    இயேசுவின் **பாதை** வாழ்வு தரும்!

செல்வன். L. **அருண் சூர்யா**

# பெண்ணே! எழுந்து ஒளிவீசு!

எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது. இதோ! இருள் பூவுலகை மூடும். காரிருள் மக்களினங்களை கவ்வும். ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார் அவரது மாட்சி உன்மீது தோன்றும் (எசாயா 60:1,2) என்ற இறைவார்த்தை மார்ச் 8 ஆம் தேதியை அகில உலக பெண்கள் தினமாக கொண்டாடும் பெண்களுக்கு உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. பெண்கள் ஆண்களை விட எந்த துறையிலும் சளைத்தவர்கள் அல்ல என்று கோஷங்களை எழுப்புகின்ற இந்நாட்களில், விவிலியத்திலும் சரி, அன்றாட வாழ்க்கையிலும் தங்கள் குடும்ப அளவிலும், சமூக அளவிலும், தேச அளவிலும், வரலாற்று அளவிலும் கூட பெண்கள் ஏற்படுத்தின தாக்கம் இன்று வரை தொடர்கிறது.

**மருத்துவ உலகின் சரித்திர மங்கை சாந்தா** : சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் சேர்மேன் Dr. V. சாந்தா அவர்கள் 1961வது ஆண்டிலிருந்து மருத்துவதுறையில் 67 ஆண்டுகள் தன்னையே அர்ப்பணித்து இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மக்களுக்கு அதுவும் ஏழை எளிய மக்களுக்கு தொண்டாற்றி உள்ளார். இவருடைய அர்ப்பணிப்பும், முனைப்பும்தான் மருத்துவ உலகில் இவர் எழுந்து ஒளி வீச செய்தது.

**கொரோனா காலத்தில் குடும்பங்களை காப்பாற்றியது பெண்கள்** : கொரோனா காலத்தில் எல்லாமே மூடப்பட்டிருந்தாலும் யார் வீட்டிலும் அடுப்பு அணைக்கப்படவில்லை. வேலையில்லாத சூழ்நிலையிலும் தங்கள் குடும்பத்தை தாங்கி நிறுத்தியவர்கள் பெண்கள். ஒவ்வொரு குடும்பமும் குட்டித் திரு அவையாக மாறிப்போனது பெண்களால்தான்.

**தேர்தலில் பெண்கள்** : வருகிற தேர்தலில் போட்டியிட பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுமா? என்று அரசியல் கட்சிகளிடம் எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிற சூழலில், ஒவ்வொரு தேர்தலிலும் பெண்களின் ஓட்டு எந்த கட்சிக்கு அதிகமாக விழுகிறதோ அவர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி உள்ளனர். ஆகவே தேர்தலில் பெண்களின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழக சட்டமன்றத்துக்கான ஒவ்வொரு தேர்தல்களிலும் பெண்களின் வெற்றி விகிதம் குறைந்து கொண்டே வந்துள்ளது. வாக்களிக்கும் பெண்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வரவேண்டும் என ஒவ்வொரு தேர்தலிலும் பரவலாக பேசப்படுகிறது. ஆனால் கட்சிகள் முன்னுரிமை தர மறுக்கின்றன. இனி வருங்காலங்களில் பெண்களுக்கு உரிய பங்களிப்பை கொடுக்க வேண்டும்.

**நீதிதலைவி தெபோரா :** விவிலியத்தில் தெபோரா என்ற பெண்ணைக் குறித்து பார்க்கிறோம். அவர் ஒரு நீதிதலைவியாகவும், இறைவாக்கினராகவும் இருந்தார் (நீதித்தலைவர்கள் 4:4) இஸ்ரயேல் மக்களை யாபின் என்ற மன்னன் துன்புறுத்தி வந்த நாட்களில் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கி கூக்குரலிட்டனர். (நீதித்தலைவர்கள் 4:2,3). தெபோரா பேரீச்சை மரத்தடியில் அமர்ந்து மக்களுக்கு நீதித்தீர்ப்பு வழங்கி கொண்டிருப்பார். இந்த பெண் தெபோரா எழும்பி இஸ்ரயேல் மக்களுக்கு அந்நாட்களில் விடுதலை அளித்தார். தெபோரா! நீ எழும்பும் வரை இஸ்ரயேலின் தாயாக தோன்றும்வரை இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ் விழுந்து கிடந்தன (நீதித்தலைவர்கள் 5:7) என்று பார்க்கிறோம். தெபோரா எழும்பிய பிறகு நாட்டில் நாற்பது ஆண்டுகள் அமைதி நிலவிற்று.

பெண்கள் தினத்தை கொண்டாடுகிற நாமும் ஆண்டவர் மீது அன்பு கூர்ந்து நம்முடைய கடமைகளை சரிவர செய்து கதிரவன் போல் பொலிவுடன் வாழ்வோம்.

**திருமிகு. ஹேமா ஸ்டீபன்**

---

## பிப்ரவரி மாதம் – 2021



## திருமுழுக்கு பெற்ற குழந்தைகள்

| | குழந்தையின் பெயர் | பெற்றோர் பெயர் |
|---|---|---|
| 1. | தர்ஷன் | சவரி ராஜேஷ்குமார் - ஜெமிலா சோபனா |
| 2. | ஜெர்வின் செபாஸ்டின் | ராபின்சன் - ஆன்டனி கிறிஸ்டினா |
| 3. | ஸ்கைலின் கிரேஸ் | பிரவின் குமார் - மெர்லின் |
| 4. | டார்வின் ராஜ் | ஆனந்த் அமிர்த்ராஜ் - சாந்தா ஷீலா |
| 5. | சன்ஜனா | ராஜ்குமார் - கவிதா |
| 6. | ஆன்டனி தனுஷ்குமார் | சசிகுமார் - செலின் சகாயராணி |
| 7. | ஏன்சல் இனியா | ஆரோக்கியநாதன் - வினோத் |
| 8. | ஜேடன் மேத்யூ | முத்துகுமார் - டெய்சி கமலா ராணி |
| 9. | துனா மேட்லின் | தீபன் மோகன் தாஸ் - கேத்லின் ஆரோக்கிய மேரி |
| 10. | இனிக கெட்சியாள் | அலெக்ஸ் ருமாரியோ |

# திரு அவை செய்திகள்

- மியான்மாரில் இராணுவத்தால் ஆட்சிக்கவிழ்ப்பு மற்றும் உயர் அரசு அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கும் இவ்வேளையில், அந்நாட்டிற்காக, இறைவனை உருக்கமாக மன்றாடுமாறு, தலைநகர் யாங்கூன் துணை ஆயர் சா யோ ஹான் (Saw Yaw Han) அவர்கள், விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளார்.

- "மனித உடன்பிறந்த நிலை" என்ற கருத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்டுள்ள 'Zayed' விருதினை, இவ்வாண்டு பெறும், ஐ.நா. நிறுவனத்தின் தலைமைப் பொதுச்செயலர், அந்தோனியோ கூட்டேரஸ் அவர்களையும், இளையோர் மற்றும் அமைதிக்காக இமாத் (Imad) கழகத்தை நிறுவிய Latifah Ibn Ziaten அவர்களையும் திருத்தந்தை பாராட்டியுள்ளார்.

- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், "Fratelli tutti" (அனைவரும் உடன் பிறந்தோர்) என்ற திருமடலின் தமிழ் மொழிபெயர்ப்பு, அண்மையில், கன்னியாகுமரி மாவட்டத்தின் மார்த்தாண்டத்தில் நடைபெற்ற, தமிழக ஆயர்களின் அரையாண்டு கூட்டத்தில், சீரோ மலங்கரா வழிபாட்டுமுறை தலைவர், கர்தினால் Baselios Cleemis அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

- செவித்திறனற்ற இளம் சிறார்களுக்கென, கத்தோலிக்க காரித்தாஸ் பிறரன்பு அமைப்பின் நிதியுதவியோடு காங்கோ ஜனநாயக குடியரசில் கல்விக்கூடம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

- இங்கிலாந்தில் வீடற்றிருக்கும் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு, ஆங்கிலிக்கன் சபை, தனக்குச் சொந்தமான நிலங்களைப் பயன்படுத்த முடிவெடுத்திருப்பது, உன்னதமான ஒரு செயல் என்று, இங்கிலாந்து கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் அவர்கள் புகழ்ந்துள்ளார்.

- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் விதிக்கப்பட்டுள்ள மதமாற்றத் தடைச்சட்டம், இந்துக்கள் உட்பட பல்வேறு மக்களை, கிறிஸ்துவ மறையைப் பற்றி அறிவதற்குத் தூண்டுதலாக அமைந்துள்ளது என்று, போபால் உயர் மறைமாவட்டப் பேராயர் லியோ கொர்னேலியோ அவர்கள் ஆசிய செய்தியிடம் கூறி உள்ளார்.

# இறைவாக்குத் தேடல்

(விவிலியப் பகுதி : தொடக்க நூல் 21-50 அதிகாரங்கள்)

குறிப்பு :

- பதிலைத் தனித்தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும், பெயர் அன்பியம், முகவரி குறிப்பிடவும், அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்.
- பேராலய ஒலி இதழில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குத் தலைப்பு மற்றும் பக்கம் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
- குடும்பத்திற்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- **சரியான விடை எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்தின் முதல் ஞாயிறு காலை 8.30 மணித் திருப்பலியில் சிறப்பிக்கப்படுவார்கள்.**

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் :**
**பிரதி மாதம் 22ம் தேதிக்குள்**

## I. நிரப்புக

1. எகிப்தில் குடியிருந்த இஸ்ரயேல் மக்கள் அங்கு வாழ்ந்த காலம் .............. ஆண்டுகள்.
2. ஆற்றல் மிகு நீர்த்திரளில் அவர்கள் ................போல் அமிழ்ந்தனர்.
3. மோசே கடவுள் இருந்த ................ அணுகினார்.
4. மோசேயின் வாக்குக்கிணங்க லேவியர் செயல்பட்டதால், அந்நாளில் மக்களுள் ஏறத்தாழ ..................... பேர் மடிந்தனர்.
5. தாண் குலத்தைச் சார்ந்த அகிசமாக்கின் மகன் ..............

## II. யார் யாரிடம் கூறியது?

1. ‘என்ன, இன்று விரைவாக வந்துவிட்டீர்களே?’
2. ‘என்னிடமிருந்து போய்விடு. இனிமேல் நீ என் முகத்தில் விழிக்காதபடி பார்த்துக்கொள்.’
3. ‘நம் சார்பில் தேவையான ஆள்களைத் தேர்ந்தெடு.’
4. ‘உமது பிரசன்னம் கூட வரவில்லையெனில் எங்களை இங்கிருந்து போகச் செய்யாதீர்.’

5. ‘அவர்களின் அருள்பொழிவு தலைமுறைதோறும் நிலைநிற்கும் குருத்துவமாக விளங்கும்.’

## III. சரியா? தவறா?

1. ஆண்டவர் ஆரோனை வழியில் ஒரு சத்திரத்தில் எதிர்கொண்டு அவரைக் கொல்லப் பார்த்தார்.
2. ஏழு நாள்களுக்குப் புளித்த அப்பங்களையே உண்ணுங்கள்.
3. கடவுள் எங்களோடு பேசவே வேண்டாம்.
4. ஆரோன் அமலேக்கையும் அவனுடைய மக்களையும் வாளுக்கிரையாக்கி முறியடித்தார்.
5. ஆண்டில் ஆறு முறை நீ எனக்கு விழா எடுப்பாய்.

## IV. இதழில் தேடவும்

1. நோயுற்றோருக்கான சிறப்புத் திருப்பலி நடைபெறும் நாள் எது?
2. இயேசுவின் சிலுவை ................ தரும்.
3. தூய வளனாரின் வாழ்வு முழுவதும் ஒரு ...............
4. மருத்துவ உலகின் சரித்திர மங்கை யார்?
5. இங்கிலாந்து கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் யார்?

---

### இறைவாக்குத் தேடல் போட்டியில் சரியான பதில் எழுதியவர்கள்

R. ஜெயசீலி - லூர்து அன்னைஅன்பியம், S. அன்னமேரி, T. கிறிஸ்டி, J. அனுசியா மேரி, J. ஜெஸி, S. டிரிஃபினா பிரின்சி - புனித பர்னபா அன்பியம், இம்மாகுலேட், பெ. சுமி பெனா - புனித சகாயமாதா அன்பியம், S. எலிசபெத் ராணி, ஜோ. சுபா கிறிஸ்டினாள் - புனித செல்வநாயகி மாதா அன்பியம், M.G. வின்ஸி கஸ்பார், X. நேவிஸ் சகாயமேரி - அந்தோணியார் அன்பியம், L. ஞானஜோயல், ஏ.தே. கிளாடியா செபாஸ்டின் - ஆரோக்கிய அன்னை அன்பியம், செ, ஹெபி இன்ஃபா - புனித மோட்சராக்கினி மாதா அன்பியம், J. சகாயமேரி - புனித வளன் அன்பியம், A. பெர்னா லெத்திசியா, திருமதி. அல்போன்ஸ் ஆரோக்கியசாமி - புனித அருளானந்தர் அன்பியம், A. அந்துவான் ப்ளோரா ரெஜினா, ஜிரேஸ் ஜோபாய் - புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம், சே. ஆரோக்கிய ஜூலியட் - புனித மரியம் தெரஸியா அன்பியம், ஆ. ஹார்ட்லின் - புனித மத்தேயு கபிரியேல் அன்பியம், F. சாந்தரூபி - புனித ஆசீர்வாதப்பர் அன்பியம், ஆ. அஜெய், S. மரிய பியூலா - புனித செபஸ்தியார் அன்பியம்.

**அனைவருக்கும் செபங்களும் வாழ்த்துகளும்**

# சென்ற இதழின் சரியான விடைகள்

**I.** 1. நானூறு (தொ.நூ 23:15), 2. யாக்கோபின் (தொ.நூ.25:28), 3. மூன்று (தொ.நூ. 40:16), 4. இருவர் (தொ.நூ.46:27), 5. செங்கோல் (தொ.நூ. 49:10).

**II.** 1. ஆபிரகாம் தம் வேலைக்காரர்களிடம் சொன்னது (தொ.நூ. 22:5)
2. ஈசாக்கு யாக்கோபிடம் சொன்னது (தொ.நூ. 27:29)
3. பார்வோன எகிப்தியர் அனைவரிடமும் சொன்னது (தொ.நூ. 41:55)
4. யூதா தம் தந்தை இஸ்ரயேலிடம் சொன்னது (தொ.நூ. 43:9)
5. யோசேப்பு தம் சகோதரரிடம் சொன்னது (தொ.நூ. 50:24)

**III.** 1. பாரான் - பாலை நிலம் (தொ.நூ. 21:21)
2. லூசு - பெத்தேல் (தொ.நூ 28:19)
3. தீனா - யாக்கோபின் மகள் (தொ.நூ. 34:1,3)
4. மனாசே - யோசேப்பின் தலைமகன் (தொ.நூ. 41:51)
5. பென்யமின் - முந்நூறு வெள்ளிக்காசுகளும், ஐந்து ஆடைகளும் (தொ.நூ. 45:22)

**IV.** 1. அருள் வரங்கள் (பக். 1 - பங்குப்பணியாளர்களிடமிருந்து), 2. 18 முறை (பக். 7 - புனித லூர்தன்னை), 3. விவிலிய (பக். 13 - அன்பிய வழிகாட்டி), 4. ஐயாயிரம் (பக். 14 - தாய்மொழி தினம்), 5. நன்றியின் (பக். 16 - திரு அவை செய்திகள்)

---

## <u>பிப்ரவரி மாதம் – 2021</u>



## <u>திருமணத்தில் இணைந்தவர்கள்</u>

1. அருண் பிரகாஷ் - கிருபா, மேலப்புதூர்
2. சாமுவேல் தினகரன் - பிரியதர்ஷினி, மார்சிங்பேட்டை
3. ஆன்டனி ஜெய்சன் - பிரித்தா தேவ குமாரி, மேலப்புதூர்
4. ஜார்ஜ் பெர்னான்டஸ் வில்பி - ஜெய சுந்தரி, கூனிபஜார்
5. குண செல்வன் - கஸ்தூரி, மார்சிங்பேட்டை

# புனித மரியன்னை பேராலய இளையோர் இயக்க புதிய நிர்வாக குழுவினர்

"உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே"

| பொறுப்புகள் | | பொறுப்பாளர்கள் |
|---|---|---|
| தலைவர் | : | ராபின் |
| துணைத் தலைவி | : | ஆன்சலம் |
| செயலாளர் | : | ஆகாஷ் |
| துணைச் செயலாளர் | : | சாம்சன் |
| இணைச் செயலாளர் | : | சிரில் |
| பொருளாளர் | : | க்ரிஷான் |
| துணைப் பொருளாளர் | : | அந்தோணி |



ஒரு வீட்டின் வலிமை வீட்டிலுள்ள இளைஞர்களின் நடத்தையில் அமைகிறது. ஒரு ஊரின் பலம் அந்த ஊரிலுள்ள இளைஞர் பட்டாளத்தினால் அமைகிறது. ஒரு நாட்டின் சக்தி அந்த நாட்டிலுள்ள இளையவரினால் கட்டமைக்கப்படுகிறது. அதே போல ஆன்மீகத்தின் வலிமையும் இறை பக்தியுள்ள இளைஞர்களால் தான் அமைகிறது. அதே போல ஒரு பங்கின் வலிமை அப்பங்கு இளையோர் இயக்கத்தினாலே வலிமை ஆகிறது. எனவே உங்கள் இல்லங்களில் இருக்கும் 12 வகுப்பிற்கு மேல் படிக்கும் பிள்ளைகளை நம் பங்கு இளையோர் இயக்கத்தில் இணைத்து ஆன்மிகத்திலும் பங்கின் வளர்ச்சியிலும் ஈடுபடுத்திட அன்போடு அழைக்கின்றோம். மேலும் கடந்த பல ஆண்டுகளாக நம் பங்கு இளையோர் இயக்கத்தில் இருந்து நம் பங்கு வளர்ச்சிக்கு உதவிய அனைத்து பொறுப்பாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும், மேலும் தற்போது அமைந்துள்ள புதிய நிர்வாக குழுவிற்கும் உறுப்பினர்களுக்கும் எங்களது நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றோம்.

## புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துகளும்!

## பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றிகளும்!

இப்படிக்கு

**மரியன்னை பேராலய இளையோர் இயக்கம்**

# இம்மாத அன்பியக் கூட்டங்கள்

| தேதி | அன்பியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1.3.21 | பிரான்சிஸ் சேவியர் | பிரான்சிஸ் ஷீலா – மேரிலைசா, கெம்ஸ்டவுன் |
| 2.3.21 | ஆரோக்கிய அன்னை | ஆரோக்கியமணிமாறன் – செலின், மேலப்புதூர் |
| 3.3.21 | மத்தேயு கபிரியேல் | ஜெஸ்டின் – ஞான ஜெயந்தி, மேலப்புதூர் |
| 4.3.21 | ஆசீர்வாதப்பர் | ஆரோக்கியநாதன் – ஜெயராணி, மேட்டுத்தெரு |
| 4.3.21 | குழந்தை இயேசு | சந்தோஷ், வார்னர்ஸ் ரோடு |
| 6.3.21 | சவேரியார் | ஜான்சன் – ஜென்ஸி, சவேரியார் கோயில், கூனிபஜார் |
| 8.3.21 | பவுல் | கென்னடி – ஜெஸிந்தா அம்மு, வடக்கு எடத்தெரு, பீமநகர் |
| 8.3.21 | மோட்சராக்கினி மாதா | மோட்சராக்கினி மாதா ஆலயம், பூந்தோட்டம் |
| 9.3.21 | அருளானந்தர் | அந்தோணிராஜ் – அந்துவான் ப்ளோரா, பாரதிதாசன் சாலை, கண்டோன்மெண்ட் |
| 10.3.21 | சந்தியாகப்பர் | ராஜேந்திரன் – நான்சி, கெம்ஸ்டவுன் |
| 10.3.21 | லூர்தன்னை | செல்வராஜ் – ப்ராங்கோ, காவலர் குடியிருப்பு |
| 11.3.21 | செபஸ்தியார் | செபஸ்தியார் ஆலயம், கெம்ஸ்டவுன் |
| 11.3.21 | மலைமாதா | போப் பிரான்சிஸ் கூடம் |
| 13.3.21 | அந்தோணியார் | ராஜேந்திரன் – ஜெனிட்டா, செங்குளம் |
| 13.3.21 | மரியம் தெரசா | ரெய்மெண்ட் – லில்லிமேரி, முதலியார்சத்திரம் |
| 15.3.21 | பர்னபா | தீனதயாளன் – ரோமா, ஆர்.சி. காம்போண்ட் |
| 16.3.21 | ஜெஸ்டின் | மோசஸ் – ரெஜினோ, நேமத்தான்தெரு |
| 17.3.21 | சகாயமாதா | மஞ்சுளா – ராஜன், இ.பி.கோ.தெரு |
| 18.3.21 | அந்தோணியார் | போப் பிரான்சிஸ் கூடம், மார்சிங்பேட்டை |
| 18.3.21 | திருஇருதய ஆண்டவர் | செல்வம் – உமா, கண்டித்தெரு |
| 20.3.21 | செபஸ்தியார் | ஆல்பர்ட் ஜோசப் – கரோலினாள், கூனிபஜார் |
| 20.3.21 | அடைக்கல மாதா | அடைக்கல மாதா ஆலயம், கூனிபஜார் |
| 21.3.21 | சிறுமலர் | அடைக்கல மாதா ஆலயம், யா.கட்டி மைதானம் |
| 22.3.21 | செசிலியா | அடைக்கல மாதா ஆலயம், கான்வெண்ட் ரோடு |
| 23.3.21 | அமலோற்பவ மாதா | ஜான் ஜூடு – ரோசி கோமதி |
| 24.3.21 | மரியன்னை | ஜான் ஜூடு – ரோசி கோமதி, ஜெயில்பேட்டை |
| 25.3.21 | செல்வநாயகி மாதா | மதுரம் கிருபை – மில்வன், ஆலம்தெரு |
| 26.3.21 | அன்னை தெரசா | ஒத்தக்கடை |
| 27.3.21 | வளன் | சேவியர் – வினோலியா, பீமநகர் |



இனிய பிறந்தநாள்
நல்வாழ்த்துகள்
14.03.2021

அருள்பணி. த. சகாயராஜ்
பங்குப்பணியாளர்

வாழ்த்துகளுடன்
பங்கு இறைச்சமூகம்

## துறவோர் தினம் - 02.02.2021









## அன்பிய ஆண்டு விழா 07.02.2021







## திருப்பயணம் - 13,14.02.2021






## திருநீற்றுப்புதன் - 17.02.2021






## புதுப்பிக்கப்பட்ட புனித அடைக்கல அன்னை ஆலயம்
## புனிதப்படுத்தும் விழா - 11.02.2021, கூனி பஜார்






## பேராலய அரங்கின் உணவறையை ஆசீர்வதித்தல்




## கல்லறை சுற்றுச் சுவர் ஆசீர்வதித்தல்


